Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC. NO. 169/2020 Date: 08.11.2022
Deposition of witness for prosecution: PW1 (LW1)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | ஜெயன் | Caste | |
| Father/ Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | Year: |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 08.11.2022 TIME 3.30 pm

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது கேரள மாநிலம், சேத்துக்குழியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு தமிழ் பேசத்தெரியும். கடந்த 06.06.2019ம் தேதி அதிகாலை 5 மணியளவில் கம்பம் அடிவாரத்திற்கு ஜீப்பில் கேஎல் 37 ஏ 2952 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தில் காய்கறி வாங்க நானும், எனது நண்பர் ரீஜீ வேலைக்கு ஆள் ஏற்றுவதற்காக வந்த ஜீப்பில் வந்தேன். ஜீப்பில் வந்த போது அடிவாரத்தில் எங்கள் வாகனத்தினை 2 நபர்கள் மறித்தார்கள். நாங்கள் ஏதோ விபத்து ஏற்பட்டுவிட்டது என்று வாகனத்தை நிறுத்தினோம், நிறுத்தியஉடன் 2 நபர்களுடன் மேலும் 2 நபர்கள் வந்து, இருவர் என் ஜீப்பின் மீது ஏறி எங்கள் சட்டையை பிடித்து, கத்தியை காட்டி மிரட்டி, ஒருவர் என்னை முகத்தில் குத்தி கீழே தள்ளிவிட்டார். அதன் பின்னர் ஓட்டுநர் ரீஜீவை கீழே தள்ளிவிட்டார்கள். நாங்கள் கீழே விழுந்ததும், என்னை இரண்டு நபர்கள்,ரீஜீவை இரண்டு நபர்கள் வீதம் பிடித்து அடித்தார்கள்.

2) எனது செல்போனை பறித்துவிட்டனர். ரீஜவிடம் பணம் ரூ. 8000/- பறித்துவிட்டார்கள். அதன் பிறகு அந்த வழியாக மற்றொரு வாகனம் வந்தது அதை மேற்படி நான்கு நபர்களும் விரட்டியதால், அவர்கள் நிற்காமல் சென்றுவிட்டனர். பின்னர் வாகனத்தில் இருந்த சாவியை தூக்கி காட்டிற்குள் எறிந்துவிட்டார்கள். பின்னர் நான்கு நபர்களும் பைக்கில் கம்பம் நோக்கி சென்றுவிட்டார்கள். அவர்கள் அடித்ததில் எனக்கு தலையில், கையில் காயம் ஏற்பட்டது. பின்னர் அந்த வழியாக வந்த மற்றொரு வாகனத்தில் ஏறி சென்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டபடும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் மனு எனது கம்பத்தில் உள்ள தெரிந்த நபர் சித்திக்

நான் சொன்ன விபரத்தினை எழுதி புகார் கொடுத்தேன். புகார் மனு **அ.சா.ஆ** 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை அடித்த நபர்களின் ஒருவர் ஆஜர் எதிரி மற்றும் 3 நபர்கள். மேற்படி நபர்களை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க இயலும்.

**(எதிரிகள் அனைவரும் ஆஜர் இல்லாததால், முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

A RAMANATHAN

Digitally signed by A RAMANATHAN
Date: 2022.11.08 07:18:36 +0530

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC. NO. 169/2020 Date: 08.11.2022
Deposition of witness for prosecution: PW2 (LW5)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | முகமது சித்திக் | Caste | |
| Father/ Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | Year: |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 08.11.2022 TIME 3.45 pm

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது கம்பத்தில் குடியிருந்து, ஏலக்காய் வியாபாரம் செய்து வருகிறேன். அசா1 ஜெயன் கேரளாவில் சேத்துக்குழியில் எனது கடைக்கு அருகில் கடை வைத்துள்ளார். கடந்த 06.06.2019ம் தேதி அதிகாலை 5.00 மணியளவில் அ.சா1 ஜெயன் எனக்கு போன் செய்து, நான் கம்பம் வடக்கு காவல் நிலையத்திற்கு சென்றேன். அங்கு ஜெயன் மற்றும் அவரது நண்பர் அடிப்பட்டிருந்தது, அவர்களை தாக்கி செல்லை பறித்துவிட்டார்கள் என்று கூறினார் அவர் சொன்ன விபரத்தை தமிழில் புகார் மனு நான் எழுதி காவல் நிலையத்தில் கொடுத்தோம். அதன் பின்னர் மருத்துவமனை சென்றோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நர்ன எழுதியது தான். அதில் எழுதியதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். **அ.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர்களை நான்கு நபர்கள் தாக்கியதாக கூறினார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2) அ.சா1 ஜெயன் எனக்கு 16.06.2019ம் தேதி காலை 5.30-6 மணியளவில் போன் செய்தார். அவர் போன் செய்த உடன் கம்பம் காவல் நிலையத்திற்கு சென்றுவிட்டேன். புகார் கொடுக்கும் போது, 9 -10 மணியிருக்கும். நான் தினமும் சேத்துக்குழிக்கு சென்று வருவேன் என்றால் சரிதான். காலை 8.00 மணிக்கு செல்வேன். சம்பவ இடத்திற்கும், கம்பம் வடக்கு காவல்நிலையத்திற்கும் சுமார் 15 – 20

நிமிடத்தில் வந்து விடலாம் என்றால் சரிதான். ஜெயன் சென்னதை வைத்து தான் புகார் எழுதி கொடுத்தேன். தற்போது முதல் விசாரணையில் கூறியதை போல் தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் அதன் பின்னர் என்னை விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தார்கள்.

**2 முதல் 4 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2 முதல் 4 வது எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

A RAMANATHAN

Digitally signed by A RAMANATHAN
Date: 2022.11.08 07:18:43 +0530

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC. NO. 169/2020 Date: 08.11.2022
Deposition of witness for prosecution: PW3 (LW6)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | சக்திவேல் | Caste | |
| Father/ Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | Year: |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 08.11.2022 TIME 4.00 pm

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது கம்பத்தில் குடியிருந்து, வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2019 ம் வருடம் ஒரு நாள் தேதி மாதம் ஞாபம் இல்லை. அதிகாலை 6.00 மணியளவில் கம்பம் மெட்டு அடிவாரம் வழியாக வேலைக்கு ஆட்களை அழைத்து சென்றபோது, அடிவாரத்தில் ஏற்கனவே அடித்து செல்போனை பறித்து சென்றதாக அதற்காக விசாரித்து கொண்டிருப்பதாகவும், எங்களிடம் விசாரித்ததற்கு கையெழுத்து கேட்டார்கள், அதில் நானும், மற்றொரு டிரைவரும் கையெழுத்து செய்தோம். போலிசார் வரைபடம் தயார் செய்தனர். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2) நான் கையெழுத்து செய்த இடத்தில் பள்ளிகூடம் உள்ளது என்றால் சிறிது தூரம் கீழே உள்ளது. நான் கையெழுத்து செய்த ஆவணம் எழுதிய பேப்பரா என்றால் எழுதியுள்ள பேப்பரில் தான் கையெழுத்து செய்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது. போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

**2 முதல் 4 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2 முதல் 4 வது எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

A RAMANATHAN

Digitally signed by A RAMANATHAN
Date: 2022.11.08 07:18:49 +0530

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.